செய்தி வெளியீடு எண்: 05-2017 நாள்: 12.12.2017

**விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், மற்றும் தலைமை அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் வட்டார அளவிலான அலுவலகங்கள், தொழிற்சாலைகள், ஆலைகள், நிறுவனங்கள், சிறு மற்றும் பெரிய கடைகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் ஏற்படுவதை தடுக்க அலுவலக உட் புகார் குழு அமைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் வட்டார அளவிலான அலுவலகங்கள், தொழிற்சாலைகள், ஆலைகள், நிறுவனங்கள், சிறு மற்றும் பெரிய கடைகளில் (துணிக்கடை, நகைக்கடை, பீர் கம்பெனி மற்றும் 10 பணியாளர்களுக்கு குறையாமல் பணிபுரியும் அனைத்து இடங்களிலும்) பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு Sexual Harassment of Women at Workplace (Prevention Prohibition and Redressal) Act 2013ன்படி அலுவலக உட்புகார் குழு (Internal Complaints committee) அமைக்க தெரிவிக்கப்படுகிறது.

இந்த குழுவில் குறைந்தபட்சம் 5 நபர்கள் இருக்க வேண்டும். ஐந்து நபர்கள் கொண்ட குழுவில் தலைவர் கட்டாயமாக பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். 1 அல்லது 2 ஆண் உறுப்பினர்கள் மற்றும் ஒரு நபர் வெளி நபராக இருக்க வேண்டும் (தொண்டு நிறுவனம், etc.,). இந்த உட்புகார் குழு 10 பணியாளர்களின் பணிபுரியும் ஒவ்வொரு அலுவலகத்திலும் அமைக்கப்பட வேண்டும். 10 பணியாளர்களுக்கு குறைவாக பணிபுரியும் அலுவலகங்கள் மாவட்ட அளவிலான உள்ளூர் புகார் குழு (LCC) மூலம் புகார் அளிக்கலாம்.

இந்த குழு அமைத்து அதன் விவரத்தினை உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் அறை எண்.26, முதல் தளம், மாவட்ட சமூகநல அலுவலகம், விழுப்புரம் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்க தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு குழு அமைக்க தவறினால் Sexual Harassment of Women at Workplace (Prevention Prohibition and Redressal) Act 2013ன்படி ரூ.50,000/- வரை அபராதமாக செலுத்த நேரிடும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.